**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC 608/2022 |
| Deposition of witness for Prosecution | : | P.W–5 |
| Name | : | முருகையா , வயது 65 |
| Father Name/Husband Name | : | வேலாயுதம் |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | உதவி ஆய்வாளர்(ஓய்வு) |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of May 2024.

**(எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் காவல் துறையில் உதவி ஆய்வாளாராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். சம்பவ சமயத்தில் கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் குற்றப்பிரிவு உதவி ஆய்வாளாராக 28.11.2018 ம் தேதி 22.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது இந்நீதிமன்றத்தில் இருந்து Crl.m.p No.10380/2018 உத்தரவின் படி புகார்தாரரான கோவில்பட்டி இலுப்பையூரணி தாமஸ் நகர் மாசிலாமணி மகன் லால்பகதுார் சாஸ்திரி மகன் கொடுத்த புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.623/2018 பிரிவு 464, 465, 468, 472, 473 இதச ன் படி வழக்கு பதிவு செய்தேன்.
2. விசாரணைகளை கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய பொறுப்பில் இருந்த கோவில்பட்டி மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளரின் விசாரணைக்கு வைத்தேன். ஆய்வாளர் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார். (**அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. நீதிமன்றத்தில் இருந்து வரப்பட்ட உத்தரவை நீங்கள் வாங்கினீர்களா அல்லது வேறு யாரும் வாங்கினார்களா என்றால் நிலைய எழுத்தர் வாங்கினார். நீதிமன்றத்தில் இருந்து தபால் வந்த அன்றே நிலைய எழுத்தர் உங்களிடம் வழக்கு பதிவு செய்ய கொடுத்தவிட்டார் என்றால் சரிதான்.
2. அன்று பொறுப்பில் இருந்த ஆய்வாளர் நீதிமன்ற உத்தரவை வாங்கி

பார்த்தாரா என்றால் அவர் இல்லை நான் நீதிமன்ற உத்தரவை பெற்று வழக்கு பதிவு செய்தேன்.

3. அந்த தபால் 28.11.2018 ம் தேதி தான் வந்தது என்றால் சரிதான். 22.00 மணிக்கு வந்தது. 16.11.2018 ம் தேதி நீதிமன்றத்தில் இருந்து இந்த வழக்கின் உத்தரவை காவல் நிலையத்திற்கு அனுப்பட்டதால் உள்ளது என்றால் சரிதான். எனக்கு 28.11.2018 ம் தேதி தான் கிடைத்தது.
4. வழக்கின் புகார்தாரரிடம் முதல் தகவல் அறிக்கையில் கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் இருந்து 16.11.2018 ம் தேதி உத்தரவு அனுப்பட்டுள்ள நிலையில் 28.11.2018 ம் தேதிதான் உத்தரவு உங்களுக்கு கிடைத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. 12 நாட்கள் கால தாமதமாக வழக்கு பதிவு செய்ததற்கு காரணம் எதுவும் ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.